25th February 1969]

Supply of rice to family card holders in Erode

* 43 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state whether persons belonging to the Communist and Socialist Parties observed fast as a protest against non-supply of rice to the family card holders for the month of October 1968 in Erode?

ஈரோடில் குடும்ப கார்டுகளுக்கு அரிசி வழங்கல்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

ஈரோடில் 1968 அக்டோபர் மாதம் முழுதும் குடும்ப கார்டுகளுக்கு அரிசி வழங்கவில்லை என கம்யூனிஸ்டு, சோசலிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் உண்ணாவிரதம் இருந்தனரா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அறுவடைக்குப் பின் அக்டோபரில் வெளிச் சந்தையில் அரிசி தாராளமாகக் கிடைத்து வந்ததால், ஈரோட்டில் குடும்பக் கார்டுகள் பேரில் அரிசி வழங்குவது சில வாரங்களுக்கு நிறுத்தப்பட்டது. அரிசி வழங்குவதைத் தொடர வேண்டுமென வற்புறுத்தி, உள்ளூரில் அரசியல் கட்சிகள் கிளர்ச்சி நடத்தியதாகத் தகவல் கிடைத்துள்ளது. இப்பொழுது நிலைமை திருப்திகரமாக உள்ளது. கிளர்ச்சி எதுவும் இல்லை.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, ஈரோடு மட்டுமல்ல, அக்டோபர் மாதத்தில் தமிழ்நாட்டின் பலவேறு ஊர்களில் அரிசி சப்ளை செய்யவில்லை. குறிப்பாக எங்கள் ஊரில் சப்ளை இல்லை. அதற்கு மாறாக 1,200 கிராம் கொடுத்து வந்ததை இப்போது 500 கிராமாகக் குறைத்திருக்கிறார்கள். அதற்காக என்னைக் கேட்காமல் எங்கள் ஊரில் ஒருவர் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகக் கூறி துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருக்கிறார்கள். கலெக்டருக்கு அதைத் தெரியப்படுத்தி நான் உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன் என்று அவர் சொல்லியிருக்கிறார். அதற்கு அங்கு வந்த சப்-கலெக்டர் உண்ணாவிரதம் வேண்டாமென்று கேட்டுக் கொண்டார். அவரும் அதைக் கைவிட்டார். ஆனால் அது முதல் அரிசி அதிகமாகக் கொடுக்கவில்லை. இன்றும் கொடுக்கவில்லை, நாளைக்கும் இல்லை. பிறகும் கொடுக்கப்போவதாகவும் தெரியவில்லை. இந்த மாதிரி உண்ணாவிரதம், போராட்டம், மறியல் போன்றவைகள் இல்லாத வகையில் அரிசியைக் கூடுதலாகக் கொடுக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: எதிர்க் கட்சித் தலைவர் உண்ணாவிரதம் இருக்கப்போவதாகத் தகவல் இல்லை. உண்ணாவிரதம் இருந்தால் உடம்புக்கு நல்லது என்று ஏற்கனவே அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

[25th February 1969

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: ராமனுதபுரம் ஜில்லாவில் ஸ்ரீவில்லிப்புத்தூர், சாத்தூர் தாலூகாகளில் வறட்சி அதிகமாக ஆகிவிட்டது. கடந்த ஒரு மாதமாக கிராமங்களில் நியாயவிலைக் கடைகளிலும் கூட அரிசி சப்ளை செய்யப்படுவதில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இது சம்பந்தமாக முன்பே இந்த மன்றத்தில் பதில் சொல்லியதாக ஞாபகம். பொதுவாக அரிசி கொடுக்கவில்லை என்பதைவிட அரிசி கொடுப்பதின் அடிப்படையான நோக்கம் என்னவென்று பார்க்கவேண்டும். சென்னை, கோயமுத்தூர் போன்ற மிக அதிக பற்றுக்குறை இருக்கிற இடங்களில்தான் (statutory rationing) இருக்கிறது. அங்கே வெளிச் சந்தையில் யாரும் வாங்க முடியாது. அதனுல் அரசாங்கமே முழு பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறுர்கள், தேனி, கம்பம் பகுதிகளிலே கொடுக்கப்படவில்லை என்று. ஆனுல் அந்தப் பகுதி யிலிருந்துதான் நான் அதிகமாகப் பெறவேண்டியிருக்கிறது. அங்கிருந்து வறட்சியான இடங்களுக்கு எடுத்துச் செல்லும் நிலைமை தான் இப்போதிருக்கிறது. வெளியிடங்களில் நாம் முழு ரேஷனும் கொடுக்கவில்லை. பற்றுக்குறையுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி போன்ற இடங்களில் நியாயவிலைக்கடைகள் போன்றவை வைத்து, சர்க்கார் கொடுக்காவிட்டால் கள்ள மார்க்கெட்காரர்கள் வர்த்தகத்தில் புகுந்து அதிக ஆதாயம் தேட ஆரம்பித்துவிடு வார்கள். அதற்காக நியாயவிலைக் கடைகள் அங்கே இருக்கின்றன. அவை கள்ளமார்க்கெட்டைக் கட்டுப்படுத்தத்தான்.

ஒரு கோடி முப்பது லட்சம் பேருக்கு தமிழ்நாட்டில் குடும்ப கார்டு திட்டமும், கோயமுத்தூர், சென்னை போன்ற இடங்களில் 40 லட்சம் பேருக்கு கட்டாய ரேஷனும் இருக்கிறது. ரேஷன் பற்றுக்குறை உள்ள இடங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. சில இடங்களில் பற்றுக்குறை என்று தெரிந்தால் திடீரென்று அந்த கலெக்டரே பத்து மூட்டை அனுப்பலாம். அரசாங்கம் முழு தேவையையும் பூர்த்தி செய்யமுடியாது. கள்ள மார்க்கெட்காரர் கள் அதிகமான விலைக்கு விற்காமல் நியாயமான விலையை நிலை நிறுத்த வேண்டித்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இராமனுதபுரம் பகுதியில் விருதுநகர் பகுதிதான் விலையுயர்ந்த இடமாக தெரிகிறது. அதனுல் சில சமயம் அந்த கிராமங்களுக்கும் கொடுக்கப்படுகின்றன. அரசாங்கம் தன் கடமையிலிருந்து எப்போதும் தவறுவதில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் பெரியகுளம் தாலுகா கம்பம் பற்றி சொன்னுர்கள். பெரியகுளம் தாலுகா 1,100 சதுர மைல் கொண் டது. அதில் ஒன்றேகால் லட்சம் ஏக்கர் இருக்கிறது. அதில் பத்தாயிரம் ஏக்கர் பெரியாறு பாசன நஞ்சை. இந்த ஆண்டு

25th February 1969]

தண்ணீர் தட்டுப்பாட்டால் அந்தப் பகுதியில் விளைவு குறைவாகி விட்டது. அங்குள்ள ஜனத்தொகை எட்டு லட்சம். அத்துடன் அண்மையிலுள்ள கேரளாக்காரர்கள் அங்கே வந்து திருட்டுத்தனமாக வேறு அரிசியைக் கொண்டுபோய்க்கொண்டிருக்கிறார்கள். பத்தாயிரம் ஏக்கர் நிலத்தில் பத்து லட்சம் டன் நெல்லை வைத்துக் கொண்டு எட்டு லட்சம் மக்கள் வாழமுடியுமா என்பதை அமைச்சர் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். தேனி, பெரிய குளம், போடி போன்ற பகுதிகளில் விளைவு குறைந்து பஞ்சநிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் அதிகமாக கொடுக்காவிட்டால் அந்த மக்கள் வாழமுடியாது என்பது அமைச்சருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு உறுப்பினர் கூறும் கருத்துக்களை முழுக்க முழுக்க நான் அப்படியே ஒத்துக் சொல்கிறேன். முதலமைச்சர் அவர்கள் இன்று அசெம்பிளியில் கூட ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். இன்றைக்கு எல்லா மாவட்டங்களிலும் வறட்சி நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைச் சமாளிக்க ஒன்றரை கோடி வரையில் நிதி ஒதுக்கியிருக்கிறோம். அந்த பயங்கரமான நிலையில் உணவு நிலைமையை எப்படி சமாளிப்பது என்பது தான் பிரச்னை. சர்க்காரின் தானியக் கிடங்குகள் நிரம்பியிருக்கவில்லை. கடந்த ஆண்டு இருந்த நிலைமை இப்போதில்லை. வட ஆற்காடு செங்கல்பட்டு மாவட்டங்கள் வறட்சியாகிவிட்டன. ஆகையால் விலை ஏறாத வகையில் இந்த இயற்கையின் உற்பாதத்தை சமாளிப்பதற்கு அனைவருடைய ஒத்துழைப்பும் வேண்டியிருக்கிறது. அந்த நம்பிக்கையில் எல்லாம் சரியாக நடைபெறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Treatment of Cancer

*44 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(a) the Government Hospitals where facilities exist for the treatment of Cancer;

(b) the Hospitals where Radium treatment is offered; and

(c) whether there exists any new kind of treatment for this?

புற்றுநோய் சிகிச்சை

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புற்றுநோய் சிகிச்சைக்கு அரசாங்க மருத்துவ மனைகளில் எங்கெங்கு வசதிகள் செய்யப்பட்டு உள்ளன?

(இ) ரேடியம் சிகிச்சை எங்கெங்கு செய்யப்படுகிறது?

(உ) புதிய மருந்து வகைகள் ஏதேனும் வந்துள்ளதா?